


18.01.2025

தலைப்புச்செய்திகள்

- கிராமங்களில் தன்னாட்சியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- இந்தியா - ஐரோப்பிய கூட்டமைப்பு இடையே உயர்நிலை பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள மத்திய வர்த்தக அமைச்சர் திரு.பியூஷ் கோயல் இன்று பெல்ஜியம் செல்கிறார்.
- தமிழ் மொழியிலிருந்து பிற மொழிகளுக்கு மொழியாக்கம் செய்யப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று வெளியிட்டார்.
- திருவையாற்றின் காவிரிகரையில் சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளுக்கு பஞ்சரத்ன கீர்த்தனைகளுடன் இசை அஞ்சலி செலுத்தப்பட்டது.
- இந்தியன் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை - மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர் - ஸ்வமித்வா

பிரதமர் திரு.நரேந்திரமோடி, ஸ்வமித்வா திட்டத்தின்கீழ், 65 லட்சத்திற்கும் மேற்பட்ட சொத்து அட்டைகளை 230 மாவட்டங்களில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களின் நில உரிமையாளர்களுக்கு இன்று வழங்கினார்.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் கிராமங்களில் தன்னாட்சியை முன்னெடுத்து செல்ல தமது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுவதாக எடுத்துரைத்தார்.

நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களின் நிலங்கள் ட்ரோன் மூலம் வரைபடமாக ஆவணப்படுத்தப்பட்டு கிராம மக்களின் கைகளில் அதற்கான சொத்துரிமை அட்டைகள் வழங்கப்படும் என்றார்.

ஸ்வமித்வா திட்டத்தின் சொத்துரிமை அட்டைகள் திட்டததின் மூலம் கிராம வளர்ச்சி வெகுவாக மேம்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஊரக பொருளாதாரத்திற்கு இத்தினம் இன்றியமையாதது என்று கூறிய பிரதமர் நாட்டில் உள்ள கிராமங்கள் இந்த திட்டத்தினால் பெரிதும் பயனடையும் என்று எடுத்துரைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ் ராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீகங்கா நகரை சேர்ந்த பயனாளியுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

முன்னதாக கிராமப்புற நில மின்னணு மயமாக்கல் நடவடிக்கைகளால் நாட்டின் எதிர்கால வேளாண்மை உத்வேகம் பெறுவது தொடர்பான அலபழஎ இந்தியா சமூகவலைதள பதிவை பகிர்ந்த பிரதமர், கிராமப்புற மேலாண்மையில் வெளிப்படைத்தன்மை, அணுகுமுறை, அதிகாரம் அளித்தல் போன்றவை முன்னெடுத்துச்செல்லப்படுவதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஊரக பகுதிகளுக்கு தொழில்நுட்பமும் நல்லாட்சியும் உறுதி செய்யப்பட்டு ஆளுமை வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஊரக பகுதியில் உள்ள நில உரிமையாளர்களுக்கு சொத்து சார்ந்த உரிமைகள் இலகுவாக்கப்பட்டு, தடையில்லா எதிர்கால பண்ணை நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அச்சமூக வலைதள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 118-வது முறையாக நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசைகளிலும் இந்நிகழ்ச்சி நேரடி ஒலிபரப்பு செய்யப்படும்.

தொடர்ந்து காலை 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

ழுழுழுழுழுழுழுழுழு

பட்ஜெட் கூட்டத்தொடர்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 31ஆம் தேதி தொடங்குகிறது.

இந்தாண்டின் முதல் கூட்டத்தொடர் இது என்பதால் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் அன்று உரையாற்றுகிறார்.

வரும் 1ஆம் தேதி 2025-26ஆம் நிதியாண்டிற்கான பொது பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்பகுதி வரும் 31ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 13ஆம் தேதிவரையிலும்,

இரண்டாவது பகுதி மார்ச் 10ஆம் தேதிமுதல் ஏப்ரல் 4ஆம் தேதிவரையிலும் நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

பியூஷ்கோயல்

மத்திய வர்த்தகம் தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் 3 நாள் பயணமாக இன்று பெல்ஜியம் தலைநகர் டீசரளளநடள செல்கிறார்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஆயசழள ளுநகஉழஎைஉ-ஐ சந்தித்து இந்திய ஐரோப்பிய கூட்டமைப்பு இடையே தடையில்லா வர்த்தகம் உள்ளிட்ட உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழு

ரிசர்வ்வங்கி

வங்கி வாடிக்கையாளர்களின் வைப்புதொகை கணக்குகள் மற்றும் பாதுகாப்பு பெட்டகங்களுக்கு நியமன வாரிசுதாரர்களின் பெயர்களை உறுதிசெய்ய இந்திய ரிசர்வ் வங்கி வங்கிகளை அறிவுறுத்தியுள்ளது.

பலவங்கி கணக்குகளுக்கு வாரிசுதாரர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள ரிசர்வ் வங்கி, இடையூறுகளையும் சிக்கல்களையும் களைய இந்நடவடிக்கை அவசியமாவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

சென்னை பன்னாட்டு புத்தக திருவிழாவில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

தமிழில் இருந்து பிற மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட 30 நூல்களையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

இப்புத்தக திருவிழாவில் 65 நாடுகளை சேர்ந்த எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் பங்கேற்றனர்.

சென்னை நந்தம்பாக்கத்தில் கடந்த 16ஆம் தேதி தொடங்கி இப்புத்தக திருவிழா இன்றுடன் நிறைவடைகிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

வேட்புமனு பரிசீலனை

தில்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 5-ம் தேதி நடைபெறும் ஒரேகட்ட வாக்குப்பதிவிற்கான வேட்புமனு பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

இத்துடன் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத்தொகுதிக்கு அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களும் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

இத்தேர்தலில் போட்டியிட திமுக, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேட்சைகள் என 58 பேர் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களை திரும்ப பெற வரும் 20ஆம் தேதி கடைசிநாளாகும்.

இதனிடையே ஈரோட்டில் தேர்தல் விதிமீறல் தொடர்பாக 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 12 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் ஈரோடு மாநகராட்சி ஆணையரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு.மணீஷ் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழு

திருச்செந்தூர்

திருச்செந்தூர் கடற்கரையில் கடல் அரிப்பு காரணங்கள் தொடர்பான ஆய்வு இன்று நடைபெற்றது.

அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு.அனிதாராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.இளம்பகவத் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

ழுழுழுழுழுழுழுழு

திருவையாறு

திருவையாறு சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 178வது ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைத்தல் இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜர் முக்தி அடைந்த புஷ்ய பகுள பஞ்சமி தினமான இன்று திருவையாறு காவிரிக்கரையில் தியாகையரின் சமாதி முன்பு இசை வல்லுநர்கள் சுதா ரகுநாதன், மஹதி உள்ளிட்டோர் பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடி தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்தினர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழு

ஜீவானந்தம்

பொதுவுடமை சிற்பி என போற்றப்படும் சுதந்திரபோராட்ட தியாகி ஜீவானந்தத்தின் 62ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அவரது மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழு

படகுசேவை

கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தர் நினைவுபாறை திருவள்ளுவர் சிலை ஆகியவற்றிற்கான படகு சேவை சூறைக்காற்று காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

மறுஅறிவிப்பு வரும் வரை படகு சேவை இயங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

பலூன் திருவிழா

சர்வதேச பலூன் திருவிழா மதுரையில் இன்று தொடங்குகிறது.

தமிழக அரசும், சுற்றுலாத்துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ்விழா சென்னை, கோவைக்கு அடுத்தபடியாக மதுரையில் நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழு

ஜல்லிக்கட்டு

நாமக்கல் மாவட்டம் எருமைப்பட்டி அருகே பொன்னேரியில் நடைபெறும் ஜல்லிகட்டு போட்டிகளில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்த 500 காளைகளை அடக்க 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் களத்தில் உள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

திருச்சி நவலூர் குட்டப்பட்டில் நடைபெறும் மற்றொரு ஜல்லிகட்டு போட்டிகளில் 700 காளைகளை அடக்க, 500 மாடுபிடி வீரர்கள் களமிறங்கியுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழு

ரயில்

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலிருந்து சென்னை எழும்பூருக்கு நாளை பொங்கல் சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

நாளை இரவு 10 மணிக்கு மண்டபத்திலிருந்து புறப்படும் இந்த ரயில் மறுநாள் காலை 11.30மணிக்கு சென்னை எழும்பூர் வந்தடையும்.

ழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவிதொகை திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் அடுத்த மாதம் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் அறிவுறுத்தியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் கூடுதலாக 18 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் உத்தரவிட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அலுவலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் விசாரணை குழு அமைக்கவும், புகார் பெட்டிகளை வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை புதுக்கோட்டை ராமநாதபுரம் தூத்துக்குடி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களிலும்,

காரைக்கால் பகுதிகளிலும் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல், மன்னார்வளைகுடா பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்ற வீசக்கூடும் என்பதால் இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழு

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் இந்தியன் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை - மலேசிய இணையை இன்றுமாலை எதிர்கொள்கிறது.

காலிறுதியில் இந்த இணை தென்கொரிய இணையை 21-10 21-17 என்ற செட்களில் தோற்கடித்தது.

ழுழுழுழுழுழுழுழு

மகளிர் கிரிக்கெட்

மலேசியாவில் 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் 20-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்கின.

16 அணிகள் பங்கேற்கும் இப்போட்டியில் இந்தியா நாளை வெஸ்ட் இண்டிஸை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழு